CASE NO : CP 3/2025

NAME : PW1 – S.யோப்புதுரை

DATE : 02.12.2025

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் Ex P1 ஆவணம் ID 110/2022 என்ற வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். அந்த வழக்கு Genral Secretary of Aanamalai workers union, Valparai மூலமாக போடப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னை விசாரணையிலோ அல்லது சாட்சியாகவோ உட்படுத்தி கொண்டேனா என்றால் இல்லை. மனுவில் நான் சாதாரண வேலை வேண்டும் என்று கோரி அதற்கு attended and back wages வழங்க வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சாதாரண வேலை வேண்டும் எந்த சட்டத்தின் அடிப்படையில் கோரியுள்ளேன் என்றால் அந்த மாதிரியான சட்டம் எதுவும் எனக்கு தெரியாது. நான் கோரியுள்ள பரிகாரம் நிர்வாகத்திற்கு பொறுந்தக்கூடிய சட்டத்தில வராது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கேட்டுள்ள இந்த பரிகாரம் என்பது persons with disablities (equal opportunities

protection of rights full participation Act 1995) என்ற சட்டத்தின் அடிப்படையில் தான் வரும் அதுவும் தனியான துறைக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. Ex P1 ஆவணம் சட்டத்திற்கு உட்பட்டதல்ல என்றால் சரியல்ல. Ex P1 தீர்ப்பு Legal manager ஆண்டனி என்னையும் என் Union தலைவர் வர்கீஸ்யும் அழைத்து Srikundra tea estateக்கு contract அடிப்படையில் tea விநியோகம் செய்யும் பொறுப்பை ஒப்படைத்திருப்பதால் Srikundra tea factory க்கு தேநீர் தயார் செய்து விநியோகம் செய்யும் பணிக்கு ID 110/2022 தீர்ப்பு web copy கிடைத்தவுடன் அழைத்தார் என்றால் சரியல்ல. ஆகஸ்ட் 2024 காலகட்டத்தில் தான் அழைத்தார். வர்கீஸ்யும் நீதிமன்ற தீர்ப்பை பற்றி கலந்துரையாடினார் என்றால் ஆகஸ்ட் 2024 ல் தான் கூறினார். அவர் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னரே கூறினார் என்றால் சரியல்ல. நானும், வர்கீஸ்யும் ஜனவரி 2024ம் மாதமே நிர்வாகத்தின் தலைமை அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். Srikundra tea factory க்கு எனக்கு வேலை குடுத்த விசயத்தை தெரிவித்து உடனடியாக பணியில் சேர உத்தரவிட பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்திலே தீர்வத்தில் கண்ட

பணபலன்களை கணக்கிட்டு கணக்கீடு பட்டியல் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் நான் தான் Srikundra tea factory யில் கொடுத்த வேலை வேண்டாம் என்று கூறி estateல் தான் வேலை வேண்டும் என்று கூறினேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்று வர்கீஸ்யிடமும் பேசபட்டு நான் தான் வேலைக்கு செல்ல மாட்டேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. 05.07.2024 தேதியிட்ட Ex P4 ஆவணம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். Ex P6 ஆவணத்திலும் tea factory வர சொல்லியிருந்தது என்றால் சரிதான். 22.07.2024 அன்று என்னை பணிக்கு வர சொல்லியிருந்தும் நான் பணிக்கு செல்லவில்லை. Ex P6 கடிதம் கிடைத்ததற்கு Ex P7 பதில் நான் அனுப்பினேன் என்றால் சரிதான். Ex P7 பதில் கடிதத்திற்கு உடனடியாக நிர்வாகம் 06.07.2024ல் பதில் கடிதம் அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த கடிதம் தான் Ex R1. Ex R1 நிர்வாகத்தின் பதில் கிடைத்தபிறகு தான் நான் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். வால்பாறையில் இருக்கும் estate and factory அனைத்தும் reserve forest அருகில் உள்ள பகுதி என்றால்

சரிதான். estate ல் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவரும் இந்த காட்டுபகுதியை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். Estate மேடு, பள்ளம் நிறைந்த பகுதி என்பதால் அங்கு சென்று வேலை செய்ய வேண்டும் என்பதால் எனக்கு உடல்நிலை பாதிக்கும் என்பதால் தான் எனக்கு tea factory யில் வேலை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ID 110/2022 வழக்கிலும் எனக்கு டீ விநியோகம் செய்யும் வேலை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். டீ விநியோகம் செய்வது என்பது டீ கிரச் ல் தயாரித்து flask ல் வைத்து விடுவோம் field ல் தொழிலாளர்கள் வந்து எடுத்து செல்வார்கள். Fieldல் வேலை பார்ப்பது எனக்கு கடினமாக உள்ளதால் தான் factoryல் எனக்கு வேலை கொடுத்தார்கள் என்றால் நான் தற்போது செய்து வரும் வேலை என் உடல் நலத்திற்கு சரியாக உள்ளது. ஜனவரி 2024 முதல் நிர்வாகம் இதை தான் கூறிவருகிறார்கள் என்றும் ஆனால் நான் தான் estateல் பணியாற்றுவேன் என்று கூறி வந்தேன் என்றால் சரியல்ல. 12.03.2020 முதல் 05.01.2024 வரை என்னுடைய பணபலன்களை எதிர்மனுதாரர் நிர்வாகம் தர தயாராக இருந்தார்கள் என்றும் 06.01.2024 முதல் 15.08.2024 வரை நான் கேட்கும் பணபலன்கள் பெற எனக்கு தகுதி

இல்லை என்றால் சரியல்ல. முக்கிய தகவல்கள் அனைத்தும் மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ID 110/2022 வழக்கில் தீர்ப்பின் படி எதிர்மனுதாரர் கணக்கு படி ரூ. 1,25,188/- கொடுக்க நிர்வாகம் தயாராக இருந்த சூழலிலும் நான் தான் அதை வாங்க மறுத்தேன் என்றால் சரியல்ல. இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.